# செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்.84/2024 நாள் : 30.11.2024

## பருவமழையை முன்னிட்டு சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் கீழ்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருவமழையை முன்னிட்டு சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 15 மண்டலங்களிலும் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரை அகற்றுதல் தொடர்பான புகார்களை தெரிவிப்பதற்கு ஏதுவாக கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் 24 மணி நேரமும் இயங்கும். பொதுமக்கள் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொண்டு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம்.

| | |
|---|---|
| கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் | 044-45674567 (20 இணைப்புகள்)<br><br>கட்டணமில்லா தொலைபேசி எண். 1916 |

மேலும், 299 தூர்வாரும் இயந்திரங்கள், 73 அதிவேக கழிவுநீர் உறிஞ்சும் வாகனங்கள், 225 ஜெட்ராடிங் வாகனங்கள் மற்றும் பிற மாவட்டங்களிலிருந்து வரவழைக்கபட்ட 45 கழிவுநீர் ஊர்திகள் என மொத்தம் 642 கழிவுநீரகற்றும் இயந்திரங்கள் கழிவுநீரகற்றும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றும் பணிகளை 2,149 களப்பணியாளர்கள் மேற்கொண்டு வருகிறார்கள்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater